**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 12.06.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ்தர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

## வழக்கு எண். SA 14841/SCIC/2023

திரு.கே.பழனி த/பெ. குப்புசாமி — மேல்முறையீட்டாளர்
3, முதல் தெரு சோனி நகர்
வேளச்சேரி, சென்னை-600 042.

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம் .... பொது அதிகார அமைப்பு
வண்டலூர்

**ஆணை**

**இவ்வழக்கின் விசாரணை ஏற்கெனவே 25/03/2025 அன்று ஆணையத்தால் நடத்தப்பட்டு கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பித்திருந்தது.**

> **எனவே, மேற்குறிப்பிட்ட செல்வி.இந்திரா கிறிஸ்டி அவர்கள் குறிப்பிட்ட காலவரம்பான 30 நாட்களுக்குள் தகவல் வழங்காமைக்காக, அவர் மீது பிரிவு 20(1), 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான காரண விளக்கங்களை, இவ்வாணை கிடைக்கப் பெற்ற பதினைந்து வேலை தினங்களுக்குள் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் பெற்று அதனை 08/05/2025 அன்று பிற்பகல் ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**
>
> **மேலும், பொதுத் தகவல் அலுவலர், மீண்டும் மனுதாரருக்கு 18/12/2024 தேதியிட்டு தகவல் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். அதற்கு மனுதாரர், தனக்கு முக்கியமாக தனது பிரிவு 6(1)-ன் கீழான மனுவில் கோரியுள்ள இனங்கள் 4,5,6 ஆகியவற்றிற்கு சரியான தகவல் வழங்க வேண்டுமென்றார். ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, ஆணையம் கீழ்க்கண்ட ஆணையைப் பிறப்பிக்கின்றது. பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வண்டலூர் வட்டம் அவர்கள் மனுதாரருக்கு இனம் 4-க்கு திருத்திய தகவலை வழங்க வேண்டும் என்றும், இனம் 5-க்கு பதிவேடுகளைத் தேடிப்பார்ப்பதோடு, அத்தகவல்கள் எந்த அலுவலகத்தில் உள்ளதோ, அங்கிருந்து பெற்று அதனை மனுதாரருக்கு**

இவ்வாணை கிடைக்கப் பெற்ற ஒரு மாத காலத்திற்குள் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைக்க வேண்டும். இனம்-6-க்கு, இன்றைய விசாரணையின் போது மனுதாரர், மாவட்ட வருவாய் அலுவலர், காஞ்சிபுரம் அவர்கள் 2017ஆம் ஆண்டு பட்டா வழங்க ஆணை பிறப்பித்துள்ளதாகவும், ஆனால் அவ்வாணையினை செயல்படுத்த ஒருவரும் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை எனவும் தெரிவித்தார். மனுதாரர் மேற்குறிப்பிட்ட மாவட்ட வருவாய் அலுவலர், காஞ்சிபுரம் அவர்கள் 27/01/2017 தேதியிட்டு பிறப்பித்த ஆணையின் நகலை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார். எனவே, மேற்குறிப்பிட்ட செயல்முறையின் நகல் இவ்வாணையுடன் இணைத்து, மாவட்ட வருவாய் அலுவலர், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களுக்கு அனுப்பப்படுகிறது. இவ்வாணை கிடைக்கப் பெற்ற இரண்டு மாதத்திற்குள், அவ்வாணையின் மீது கடந்த எட்டு வருடங்களாக நடவடிக்கை எடுக்காததற்கான காரணம் என்ன ? அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் இருந்ததற்கு பொறுப்பாளிகள் யார் என்று நிர்ணயித்து அவர்கள் மீது எடுத்த நடவடிக்கையின் அறிக்கையினை ஆணையத்திற்கு, மாவட்ட வருவாய் அலுவலர், 08/05/2025 அன்று சமர்ப்பிக்குமாறு ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.

மேலும், மனுதாரர் தெரிவிக்கையில், தான் 2023 ஆம் ஆண்டு உரிய ஆவண இணைப்புகளுடன் அளித்த தனது பட்டா மாற்றத்திற்கான மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது, அதற்கான காரணம் தனக்கு தெரிவிக்கப்படவில்லை எனக் குறிப்பிட்டார். எனவே, பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வண்டலூர் வட்டம் அவர்கள் மனுதாரரின் பட்டா கோரிய மனுவினை தள்ளுபடி செய்ததற்கான காரணம் குறித்து இவ்வாணை கிடைக்கப் பெற்ற ஒரு மாதத்திற்குள் பதில் அனுப்புவதோடு, மனுதாரருக்கு அனுப்பிய தகவலின் (இனம் 4-க்கு திருத்திய நகல், இனம்-5-க்கான நகல்) நகல், அதன் பின்னர் மனுதாரரிடமிருந்து பெறப்படுகின்ற அஞ்சல் ஒப்புகை அட்டையின் நகல், மாவட்ட வருவாய் அலுவலர், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களின் விசாரணை அறிக்கை ஆகியவற்றை 08/05/2025 அன்று பிற்பகல் ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.

2. மேற்குறிப்பிட்டவாறு இன்று (08/05/2025) திருமதி/ செல்வி.M.ஷாமிளா, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வண்டலூர் வட்டம் அவர்கள் ஆஜராகி, ஆணையம் உத்தரவிட்டவாறு இனம்-4-க்கான திருத்திய தகவலின் நகல்களைக் கொண்டு வந்து, ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். அத்தகவல்களின் நகல்களை, பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைப்பதோடு, அதன் பின்னர், மனுதாரரிடமிருந்து பெறக் கூடிய அஞ்சல் ஒப்புகை அட்டையின் நகலை 12/06/2025 அன்று பிற்பகல் ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.

3. பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரின் பிரிவு 6(1)-ன் கீழான மனுவில் கோரிய இனம் 5-க்கான தகவல் செங்கல்பட்டு வட்டாட்சியர் அலுவலகம் தொடர்புடையது எனத் தெரிவித்தார். எனவே, பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், செங்கல்பட்டு வட்டம் அவர்கள் ஆணையத்தில் 12/06/2025 அன்றைய விசாரணைக்கு, இனம் 5-க்கான தகவல்களின் நகல் மற்றும் பதிவேடுகளுடன் நேரடியாக ஆஜராக வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. மனுதாரரின் 10/06/2023 தேதியிட்ட தகவல் கோரும் மனுவின் நகல் இவ்வாணையுடன் இணைத்து பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், செங்கல்பட்டு வட்டம் அவர்களுக்கு அனுப்பப்படுகிறது.

4. மனுதாரரின் பிரிவு 6(1)-ன் கீழான மனுவில் கோரிய இனம் 6-க்கான தகவலுக்கு, 25/03/2025 தேதியிட்ட உத்தரவின்படி மாவட்ட வருவாய் அலுவலர் இன்று நடவடிக்கை எடுத்த அறிக்கையினை ஆணையத்தில் சமர்ப்பித்திருக்க வேண்டும். ஆனால் மாவட்ட வருவாய் அலுவலர், இன்று ஆணையத்தில் ஆஜராகவில்லை. எனவே, இன்றைய விசாரணையில் ஆஜராகததற்கு திரு.S.வெங்கடேஷ், மாவட்ட வருவாய் அலுவலர், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்கள் மீது பிரிவு 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தையும், மேற்குறிப்பிட்ட நடவடிக்கை எடுத்த அறிக்கையினையும் ஆணையத்தில் 12/06/2025 அன்று நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. அன்றைய விசாரணைக்கு பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வண்டலூர் அவர்களும் ஆஜராக வேண்டுமென்று ஆணையம் உத்தரவிடுகிறது.

2. மேற்குறிப்பிட்டவாறு இன்று (12/06/2025) திருமதி/ செல்வி.M.ஷாமிளா, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வண்டலூர் வட்டம் அவர்கள் ஆஜராகி, ஆணையம் உத்தரவிட்டிருந்தவாறு மனுதாரருக்கு இனங்கள் 4 மற்றும் 5-க்கு அனுப்பிய தகவலின் நகல் மற்றும் மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட அஞ்சல் ஒப்புகை அட்டையின் நகல் ஆகியவற்றை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இனம்-6-க்கு, திரு.S.வெங்கடேஷ், மாவட்ட வருவாய் அலுவலர், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்கள் ஆஜராகி, கடந்த விசாரணையின் போது ஆஜராகாமைக்கான காரண விளக்கத்தையும், ஆணையம் உத்தரவிட்டிருந்தவாறு விவர அறிக்கையினையும் சமர்ப்பித்தார். ஆணையம் அதனை பரிசீலனை செய்து ஏற்கிறது. மாவட்ட வருவாய் அலுவலரின் அறிக்கையில், அப்போதைய (2017 ஆம் ஆண்டைய) மாவட்ட வருவாய் அலுவலர் ஆணை பிறப்பித்துள்ளார் என்றும் அதனைத் தொடர்ந்து 2019ம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம், செங்கல்பட்டு என இரண்டு மாவட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது, தற்போது மேற்குறிப்பிட்ட கிராமமான ரத்தினமங்கலம், செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் தாலுக்கா அதிகார வரம்பெல்லையில் அமைந்துள்ளது என்றும் மனுதாரர், புல எண்.64/2b-ல் உள்ள நிலத்தை தனது மகள் ஜான்சி என்பவருடைய பெயரில் பட்டா மாற்றம் செய்யும் கோரிக்கையினை தற்போது தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வண்டலூர் அவர்களால் நிறைவேற்றிட இயலும் என்றும் தெரிவித்துள்ளார். மேலும், மாவட்ட வருவாய் அலுவலர், காஞ்சிபுரம் தெரிவிக்கையில், ஆணையம் பிறப்பித்துள்ள உத்தரவு குறித்த விவரங்கள் அனைத்தையும், மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்கள், மாவட்ட ஆட்சியர், செங்கல்பட்டு அவர்களுக்கு தெரிவித்துள்ளதாகவும், 2017 ஆம் ஆண்டைய மாவட்ட வருவாய் அலுவலரின் ஆணையினை நிறைவேற்றாதது பற்றிய நடவடிக்கை குறித்த அறிக்கையினை கோரப்பட்டிருப்பது குறித்தும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகத் குறிப்பிட்டுள்ளார். மேலும், மேற்சொன்ன விவரங்கள் அடங்கிய கோப்புகள் அனைத்தும் மாவட்டம் பிரிக்கப்பட்ட போதே, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

3. இன்றைய விசாரணையின் போது மாவட்ட வருவாய் அலுவலர், காஞ்சிபுரம் அவர்கள் தெரிவிக்கையில், தற்போது, 2017 ஆம் ஆண்டைய மாவட்ட வருவாய் அலுவலர் பிறப்பித்த ஆணையின் படி மேற்குறிப்பிட்ட புல எண்.64/2b -ல்

**அமைந்துள்ள நிலம் பழனி என்பவரின் பெயரிலேயே தற்போதும் இருப்பதாகவும், 27/01/2017 தேதியிட்ட மாவட்ட வருவாய் அலுவலர் ஆணையில் உத்தரவிட்டுள்ளவாறு அந்த புல எண் நிலத்தை தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வண்டலூர் வட்டம் அவர்கள் மேற்குறிப்பிட்ட அவரது மகள் ஜான்சியின் பெயருக்கு மாற்றலாம் என்றும் தெரிவித்தார். எனவே, புல எண்.64/2b-ன் மீது பட்டா மாற்றம் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தையும் தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வண்டலூர் வட்டம் அவர்கள் முறையாக நிறைவேற்றி, அது குறித்த அறிக்கையினை 26/06/2025 அன்று பிற்பகல் ஆணையத்தில் ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 14841/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
வண்டலூர்.

2.பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
செங்கல்பட்டு வட்டாட்சியர் அலுவலகம்
செங்கல்பட்டு மாவட்டம் (இணைப்புடன்)

3. திரு. S.வெங்கடேஷ்,
மாவட்ட வருவாய் அலுவலர்
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
காஞ்சிபுரம் மாவட்டம்.

4. செல்வி.இந்திரா கிறிஸ்டி
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வண்டலூர் வட்டாட்சியர் அலுவலகம்
தற்போது தாம்பரம் வட்டாட்சியர் அலுவலகம்

**மேல்முறையீட்டாளர்**
திரு.கே.பழனி த/பெ. குப்புசாமி
3, முதல் தெரு சோனி நகர்
வேளச்சேரி, சென்னை-600 042.

நகல்
1.மாவட்ட ஆட்சித் தலைவர்
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்
செங்கல்பட்டு மாவட்டம்.

2.பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-600 035 (for follow up)

RG/PC